**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT MUNSIF, TENKASI.**

O.S. No. 288/2022

Deposition of witness for PW2

| | | |
|---|---|---|
| Name | : | சுடர் செல்வம் |
| Father's Name | : | அய்யாத்துரை |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 26.11.2024.

<u>முதல் விசாரணை</u>:

1. நான் தற்போது குலசேகரப்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து சார்பு செய்யப்பட்ட அழைப்பாணையின் அடிப்படையில் அழைப்பாணையில் கோரிய ஆவணங்களுடன் இன்று சாட்சியம் சொல்ல ஆஜராகியுள்ளேன்.

2. குலசேகரப்பட்டி கிராமத்தில் நத்தம் சர்வே எண்.622/8A மற்றும் அதன் பழைய சர்வே எண்.622 க்குரிய தூய அடங்கல் பதிவேடு சா.சா.ஆ.1 ஆக வா.சா.2 விசாரணையில் குறியீடு செய்யப்படுகிறது.

3. குலசேகரப்பட்டி கிராமத்தில் நத்தம் சர்வே எண்.622/8A மற்றும் அதன் பழைய சர்வே எண்.622 க்குரிய தூய நத்தம் நிலவரித்திட்ட பதிவேடு சா.சா.ஆ.2 ஆக வா.சா.2 விசாரணையில் குறியீடு செய்யப்படுகிறது.

4. குலசேகரப்பட்டி கிராமத்தில் நத்தம் சர்வே எண்.622/8A மறும் அதன் பழைய சர்வே எண்.622 க்குரிய கணினி பட்டா சா.சா.ஆ.3 ஆக வா.சா.2 விசாரணையில் குறியீடு செய்யப்படுகிறது.

5. நாளதுவரை சர்வே எண்.622/8A சந்தானம் பெயரில் தான் பட்டா உள்ளது.

**குறுக்குவிசாரணை (பிரதிவாதி தரப்பில்)**

1. நான் பணி செய்யும் கிராமத்திற்கு உட்பட்ட சர்வே கற்களை பராமரிப்பது என்னுடைய பொறுப்பு என்றால் சரிதான்.

2. நான் பணிசெய்யும் கிராமத்திற்கு மாறுதலாகி 3 மாதம் தான் ஆகிறது என்பதால் கடைசியாக எப்போது சர்வே கற்கள் பராமரிப்பு நடந்தது என்று எனக்கு தெரியாது.

3. நான் சாட்சியம் அளிக்க வருவதற்கு முன்பு ஸ்தல பார்வையிட்டுதான் வந்தேன்.

4. நான் எடுத்துவந்த தூய அடங்கல் பதிவேட்டில் சர்வே எண்.622/9B–க்கான பதிவு உள்ளது. ஆவணங்களின் பதிவின்படி சர்வே எண்.622/9B ஆனது கடற்கரை பெயரில் உள்ளது. சர்வே எண்.622/9B–க்கான தூய அடங்கல் பதிவேடு சா.சா.ஆ.4 ஆக வா.சா.2 குறுக்குவிசாரணையில் குறியீடு செய்யப்படுகிறது.

5. நான் எடுத்துவந்த தூய அடங்கல் பதிவேட்டில் சர்வே எண்.622/5A, 622/5B –க்கான பதிவு இல்லை.

6. நான் எடுத்துவந்த தூய அடங்கல் பதிவேட்டில் சர்வே எண்.622/8B –க்கான பதிவு உள்ளது. ஆவணங்களின் பதிவின்படி சர்வே எண்.622/8B ஆனது பால்நாடார், வே.செல்லையா பெயரில் உள்ளது. சர்வே எண்.622/8B–க்கான தூய அடங்கல் பதிவேடு சா.சா.ஆ.5 ஆக வா.சா.2 குறுக்குவிசாரணையில் குறியீடு செய்யப்படுகிறது.

7. பொதுவாக வருவாய் ஆவண பதிவேட்டில் தவறு இருந்தால் விண்ணப்பதாரர் விண்ணப்பத்தின்பேரில் தவறை திருத்துவார்கள் என்றால் சரிதான்.

8. நான் வழக்கிற்காக ஸ்தல ஆய்வு செய்ததாக தவறாக கூறுகிறேன் என்றும், உண்மையில் ஸ்தல ஆய்வு செய்யவில்லை என்றும், வருவாய் ஆவணங்களில் ஏற்பட்ட தவறான பதிவுகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி